டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.09.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 23 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 078 | Madurai | Online Edition

# கோவை, மதுரை திருச்சி உள்ளிட்ட 15 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!

சென்னை, செப்.19

தமிழகத்தில் கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட 15 மாவட்டங்களில் இன்று (செப்.20) மற்றும் நாளை (செப்.21) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு கடலோர ஆந்திரா முதல் மன்னார் வளைகுடா வரை, தமிழக பகுதிகள் வழியாக ஒரு வடக்கு - தெற்கு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்றும் (செப்.20), நாளையும் (செப்.21) நீலகிரி, கோவை, கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக் குறிச்சி, வேலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரியிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இந்த இரு தினங்களும் இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சிவகங்கை, ஈரோடு, ராமநாதபுரம், நாமக்கல், கரூர், புதுக்கோட்டை மற்றும் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

22-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்கள் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (செப்.20) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஆறு நாட்கள் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி

மதுரை, செப்.19

மதுரை, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஆறு நாட்கள் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி (21.09.26 முதல் 26.09.26 வரை) நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், தேன் எடுக்கும் முறை, தேனீக்களை தாக்கும் பூச்சி நோய்கள் பற்றியும் கொம்புத்தேனீ மற்றும் கொசுத்தேனீ வளர்ப்பு முறைகள் தேன் பதப்படுத்தும் முறைகள் மற்றும் தேனில் இருந்து தயாரிக் கப்படும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி மற்றும் செயல்முறை வகுப்பு நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் 45 வயதிற்கு உட்பட்ட ஆண்கள், பெண்கள் பங்கேற்கலாம், முதலில் வரும் 25 நபர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

தொடர்புக்கு முனைவர் கி. சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை. அலைபேசி எண்: +91 99652 88760.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சுற்றுச்சூழல், பருவநிலை இயக்கவியல் எதிர்காலம் குறித்த சர்வதேச மாநாட்டை பிரதமர் தொடங்கி வைத்தார்

புது தில்லி, செப்.19

சுற்றுச்சூழல், பருவநிலை இயக்கவியல் எதிர்காலம் குறித்த சர்வதேச மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

தேசிய பசுமைப் தீர்ப்பாயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு, புதுதில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் 19, 20 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் சுற்றுச்சூழல் நிபுணர்கள், உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் பல்வேறு அமைச்சகங்களின் செயலாளர்கள், அரசு அதிகாரிகள், மாநில நீதித்துறைப் பயிற்சி மையங்கள், மாநில சட்டச் சேவை ஆணையங்கள், நிபுணர் மதிப்பீட்டுக் குழுக்கள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையங்கள், மாநில சதுப்பு நில ஆணையங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பங்கேற்கின்றனர். மேலும், 17 நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், நீதித்துறை பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கின்றனர்.

பல்வேறு அதிகார வரம்புகளுக்கு இடையே நீதித்துறையின் செயல்பாடுகள், அறிவியல் சார்ந்த திறனறிவு, சுற்றுச்சூழல் நிர்வாக நடைமுறைகள், அமைப்பு ரீதியான அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கானத் தளமாக இந்த மாநாடு அமையும்.

கொள்கை உருவாக்கம், செயல்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள இடைவெளிகள் உள்ளிட்ட சுற்றுச்சூழல், பருவநிலை தொடர்பான சவால்கள் குறித்த இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**43. காய்கறி கிளியர் சூப்**

**தேவையான பொருட்கள்**

கேரட் — ¼ கப்

பீன்ஸ் — ¼ கப்

முட்டைக்கோஸ் — ¼ கப்

வெங்காயத்தாள் — சிறிது

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

காய்கறிகளை வேக வைத்து வடிகட்டாமல் மிளகு, உப்பு சேர்த்து சூடாக பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# ஒலக்கூர் வட்டார விவசாயிகளுக்கு உரங்களின் சமச்சீர் பயன்பாடு குறித்து பயிற்சி




விழுப்புரம், செப்.19

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்டத்தின் சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒலக்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆரோக்கியராஜ் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற இப்பயிற்சிக்கு துணை வேளாண்மை அலுவலர் சின்னத்துரை தலைமை தாங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவசண்முகம் வரவேற்புரையாற்றினார். பயிற்சியில் விழுப்புரம் மாவட்ட மண் பரிசோதனை வேளாண்மை அலுவலர் ஜெரிகாட் மெர்சி கலந்து கொண்டு, உரங்களின் சமச்சீர் பயன்பாடு, உரப் பயன்பாட்டுத் திறன் மற்றும் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தார்.

மண் பரிசோதனை செய்து, மண்ணின் தன்மை மற்றும் அதிலுள்ள சத்துக்களின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான உரங்களை சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். உரங்களை தேவைக்கு அதிகமாக பயன்படுத்துவதைத் தவிர்த்து, பரிந்துரைக்கப்பட்ட அளவில் சமச்சீராக பயன்படுத்துவதன் மூலம் மண் வளத்தை பாதுகாப்பதுடன், பயிர்களின் மகசூலை அதிகரிக்கவும், உரச் செலவைக் குறைக்கவும் முடியும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் சுதாகர் வேளாண் திட்டப் பணிகள் மற்றும் வேளாண் மானியங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சிட்டிபாபு நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஆனந்தி சுப்ரியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வீராசாமி ஆகியோர் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கல்யாண் ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# காய்கறி உற்பத்தியில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த வெளிவளாக பயிற்சி

கடலூர், செப்.19

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம், சார்பாக 17.09.26 அன்று நல்லூர் வட்டாரம், நல்லூர் கிராமத்தில் 'காய்கறி உற்பத்தியில் மேம்பட்ட தொழில் நுட்பங்கள்' குறித்த வெளிவளாக பயிற்சி நடைப்பெற்றது. வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்து, கே.வி.கே.வின் முக்கிய செயல்பாடுகள் மற்றும் காய்கறி உற்பத்தியின் அவசியம் குறித்தும் விளக்கினார்.



மேலும், முனைவர் ளு.சிவசங்கர், தோட்டக்கலைத் துறை வல்லுநர், இயற்கை வழியில் காய்கறி சாகுபடி செய்யும் முறைகள், கத்திரியில் ஒட்டுக்கட்டுதல் மற்றும் செடிகளுக்கு இடையிலான இடைவெளி குறித்தும் விரிவாக விளக்கினார்.

மேலும், ஓராண்டு முருங்கை சாகுபடி முறைகள் மற்றும் அதே நிலத்தில் முருங்கைச் செடியின் ஆதரவுடன் பூசணி வகைக் காய்கறிகளைச் சாகுபடி செய்யும் முறைகள் குறித்தும், காய்கறி விளைச்சலை அதிகரிக்கத் தேவையான ஊட்டச்சத்து மற்றும் நீர் மேலாண்மை முறைகள் மற்றும் சிறப்புப் பயிர் சாகுபடி முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் பூச்சி நோய் மேலாண்மை முறைகள், இயற்கை இடுப் பொருட்கள் தயாரிக்கும் முறை மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்தும், காய்கறிகள் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், குறிப்பாக முருங்கை இலைப்பொடி, முருங்கை எண்ணெய் மற்றும் முருங்கையிலிருந்து தயாரிக்கப்படும் உலர்த்தப்பட்ட பொருட்கள் பற்றியும் விரிவாக எடுத்துத்துரைக்கப் பட்டது.

மேலும் இப்பயிற்சியில், அலெக்ஸ் (உதவி இயக்குநர், தோட்டக்கலைத் துறை) விருத்தாசலம், தோட்டக்கலைத் துறையில் செயல்படும் பல்வேறு திட்டங்கள், சொட்டு நீர் பாசனம் முறைகள் பற்றியும் விரிவாக விளக்கினார்.

இப்பயிற்சியில் தோட்டக்கலை துறை அலுவலர் செல்வகுமார் கலந்துக் கொண்டார்.

மேலும் கடலூர் மாவட்டம், நல்லூர் வட்டாரம், நல்லூர் கிராமத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# தென்னை பரப்பு விரிவாக்கத் திட்டம்

**திட்டத்தின் நோக்கம்**

புதிய பரப்பளவில் தென்னை தோட்டங்களை உருவாக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நிதி உதவி வழங்குதல்.

**திட்டக் காலம்**

2 ஆண்டுகள்.

**நிதி உதவி**

ஒரு ஹெக்டேருக்கு ரூ.56,000 இரண்டு தவணையாக பயனாளியின் வங்கி கணக்கில் செலுத்தப்படும் (முதல் வருடம் ரூ.28,000 & இரண்டாவது வருடம் ரூ.28,000).

**பரப்பளவு**

**குறைந்தபட்சம்**

0.08 ஹெக்டேர் (20 சென்ட்) / பயனாளி (குறைந்தபட்சம் 1 – நாற்றுகள் நடவு செய்திருக்க வேண்டும்)

**அதிகபட்சம்**

2 ஹெக்டேர் / பயனாளி

**நிபந்தனைகள்**

புதிய நடவு செய்தவர்கள் மட்டுமே இந்த திட்டத்தில் பயன் பெற முடியும்.

ஏற்கனவே உள்ள மரங்களுக்கு இடையில் நடுதல் அனுமதிக்

கப்படாது. எல்லை நடவு / வரப்பு நடவு / வயலோர நடவு அனுமதிக்கப்படாது.

**விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்**

பயனாளியின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் புதியதாக நாற்றுகள் நடப்பட்ட நிலத்தில் பயனாளி நின்று புவிசார் குறியீடுடன் (GPS) புகைப்படம் வைக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நாற்றங்கால் நிறுவனத்திலிருந்து பில் / வவுச்சர்கள்

ஆதார் அட்டையின் நகல்

வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் (ஆதார் இணைக்கப்பட்ட கணக்கு)

அடங்கல் மற்றும் சிட்டா நகல்கள்

தோட்டக்கலை துறை அலுவலரின் சான்றிதழ் (நடவு மற்றும் செலவினங்கள் பற்றிய பரிந்துரை)

**விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய**

https://coconutboard.gov.in/docs/aepapltamil1.pdf

**தொடர்புக்கு :** ***தென்னை வளர்ச்சி வாரியம், மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், தமிழ்நாடு. தொலைபேசி எண் : 0422 – 2993684, இ–மெயில் : ro-chennai@coconutboard.gov.in.***




# கொசுக்கள் சிலரை மட்டும் அதிகமாக கடிப்பது ஏன்? தெரியுமா?

கடந்த சில நாட்களாக மனிதர்களுக்கு பல்வேறு நோய்களை கொசுக்கள் (MOSQUITOS) உருவாக்கி வருவதை தொலைக் காட்சி செய்திதாள் வாயிலாக பார்க்கிறோம்.




குறிப்பாக மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா உள்ளிட்ட நோய்களை கொசுக்கள் பரப்புகின்றன. அதே வேளையில் ஒரு சிலரை மட்டுமே அதிகமாக கடிப்பதுண்டு. ஏன் என்ன காரணங்களை பார்ப்போமா?

**1) கார்பன் டை ஆக்சைடு**




நாம் ஒவ்வொரு முறையும் மூச்சை (சுவாசிக்கும் போது) வெளியேற்றும் போது கார்பன் டை ஆக்சைடு வெளியேறு கிறது. இந்த வாயு சுற்றுப்புறத்தில் வேதியல் சமிக்ஞை போல பரவும். இந்த வாயுவை கொசுக்கள் எளிதாக உணரக் கூடியவை. அதன் காரணமாக மனிதர்கள் இருக்கும் திசையை கொசுக்கள் எளிதாக கண்டறிந்து விடும்.

**2) மனித உடலில் வெப்பம்**

கொசுக்கள் அருகில் வந்த பிறகு நம்முடைய உடல் வெப்பமும் அதற்கு முக்கியமான சிக்னலாக அமையும். வெப்பமான தோல் கொசுக்களை எளிதில் ஈர்க்க செய்து விடும்.

**3) தோல் வாசனை**

ஒவ்வொருவரிடமிருந்து வெளிபடும் உடல் வாசனை வேறுபாடு உண்டாகும். இந்த வேறுபாடுகள் காரணமாகவே கொசுக்கள் சிலரை அதிகமாக கடிப்பது போல தோன்றலாம்.

**4) வியர்வை நாற்றம்**

மனித உடலில் வெளியேறும் வியர்வையில் பல்வேறு ரசாயனங்கள் உள்ளன. வியர்வை மட்டுமே கொசுக்களை ஈர்க்கிறது என்று கூற முடியாது.

**5) அடர்நிற ஆடைகள்**

கொசுவின் பார்வை திறனும் மனிதர்களை கண்டறிய பயன்படுகிறது. குறிப்பாக ஏடிஸ் இன கொசுக்களை அருகேயுள்ள மனிதர்களை கண்டறியும் போது அடர்நிற அடையாளத்தை வைத்து கண்டுபிடிக்கும்.

### 6) நடமாட்டம்

கொசு அருகில் இருக்கும் போது வெட்ட வெளியில் நடப்பது, உட்கார்வது போன்ற செயல்களை மனிதர்கள் மேற்கொண்டால் கடிக்கும். அதுவும் மாலை நேரங்களில் அதிகமாக கடிக்கும்.

கொசுக்கள் மனிதர்கள் வெளியேற்றும் கரியமில வாயு, வியர்வை, உடல் வாசனை. உடல்வெப்பம். அசைவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து மனிதர்களை அணுகி கடிக்கின்றன.

**கொசுக்கடியிலிருந்து தப்பிக்க என்ன செய்ய வேண்டும்.**

1) கதவு ஜன்னல்களில் கொசுவலை (MOSQUITO NET) தைக்க வேண்டும்.

2) இரவு நேரங்களில் கொசுவை விரட்ட கொசுவிரட்டி (MOSQUITO REPELLENT) பயன்படுத்திட வேண்டும்.

3) வீட்டை சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

4) காற்றோட்டமான இடங்களில் தூங்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் சிஸ்டோசோமா சேத்துப்புண் சொரிசிரங்கு மற்றும் ஹைடாடிட் நீர்கட்டி ஒட்டுண்ணி நோய்களும் தடுக்கும் முறைகளும்

மனிதன் தனது தேவைக்கான பால், முட்டை, மற்றும் இறைச்சியை பெறவும் மற்றும் குடும்ப வருமானத்தை பெருக்கவும் ஆடு, மாடு, கோழி மற்றும் பன்றிகளை சிறிய அளவிலோ அல்லது பண்ணை முறையிலோ வளர்க்கப்பட்டு வருகிறது. அதேபோல் நாய்களை பெரும்பாலான வீடுகளில் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படுகின்றன. நமது நாட்டில் நிலவும் தட்பவெப்பநிலை காரணமாக இந்த பண்ணைக் கால்நடைகள் கோழி மற்றும் செல்லப்பிராணிகள் பலவகை யான ஒட்டுண்ணி நோய்களின் தாக்கத்திற்கு உட்படுகிறது. மனிதன் தான் வளர்க்கும் கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளோடு ஒன்றி வாழ்வது, சிறு குழந்தைகள் நாய்கள் நடமாடும் இடங்களில் விளையாடுவது, நாய் குட்டிகளுடன் விளையாடுவது, கைகால் கழுவாமல் சாப்பிடுவது, நகத்தை கடிப்பது காய்கறிகளை கழுவாமல் பச்சையாக சாப்பிடுவது, இறைச்சி மற்றும் மீன்களை சரியாக வேக வைக்காமல் சாப்பிடுவது. இது தவிர கிராமபுறங்களில் குளம் ஏரிகளில் குளிப்பது தண்ணீர் குடிப்பதன் மூலம் கால்நடை மற்றும் செல்லப்பிராணிகளைத் தாக்கும் பலவகையான ஒட்டுண்ணி நோய்கள் மனிதனுக்கு பரவ வாய்ப்புள்ளது.

சிஸ்டோசோமியாஸிஸ் மற்றும் நீர்கட்டியான ஹைடாடியோஸிஸ் ஒட்டுண்ணி நோய்கள் விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் முக்கியமான ஒட்டுண்ணிகளகும். இந்த ஒட்டுண்ணிகள் மனிதர்களுக்கு எவ்வாறு பரவுகிறது, பாதிக்கப் பட்டவர்களில் காணப்படும் அறிகுறிகள், நோய்த்தாக்கத்தை கண்டுபிடிப்பது எப்படி மற்றும் ஒட்டுண்ணி தாக்கம் வராமல் தடுப்பது பற்றி இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## பறவைகளை தாக்கும் சிஸ்டோசோமா சேத்துப்புண் சொறிசிரங்கு

பறவைகளைத் தாக்கும் சிஸ்டோசோமியா தட்டைப்புழுவின் இளம்நிலை பருவத்தினால் மனிதர்களுக்கு ஏற்படும் செர்கேரியா தோல்புண் அல்லது சேத்துப்புண் நீர் நிலைகளில் வாழும் பறவைகளைத்தாக்கும் சிஸ்டோசோமா அல்லது ஆஸ்ட்ரோபில்கர்சியா ஜைசாண்டோபில்கோர்சியா போன்ற தட்டைப்புழுக்களின் செர்கேரியா பருவம் மனிதர்கள் குளம், ஏரிகளில் குளிக்கும் போது கால் தோலை துளைத்து உடம்பிற்குள் சென்றுவிடுவதால் தாக்கம் ஏற்படுகிறது.

முதல் தாக்கத்தில் லேசான தோல் சிவப்பு மற்றும் வீக்கம் போன்ற அறிகுறிகள் காணப்படும். ஆனால் திரும்ப திரும்ப செர்கேரியாவின் தாக்கத்திற்கு உட்படும் நபர்களில் கடுமையான எரிச்சல், அரிப்பு, கொப்புளம் மற்றும் தோல் புண் போன்ற அறிகுறிகள் பல வாரங்களுக்கு காணப்படுவதுடன், சில நேரத்தில் நுண்ணியிரிகளின் ஊடுறுவதால் சலம் வைத்து விடும்.

### நோயை கட்டுப்படுத்தும் முறைகள்

- பாதிக்கப்பட்ட இடத்தில் ஈரமான துணியை வைத்து இறுக்க மாக சுற்றி வைத்தல்
- வலியை குறைக்க கார்டிகோஸ்டிராய்டு களிம்மை ஒரு நாளைக்கு 3-5 தடவை போடவேண்டும்.
- அரிப்பை குறைக்க அல்லது தனிக்க ஆன்டிஹிஸ்டமின் எடுத்துக் கொக்கலாம்.
- சோடியம் பைகார்பனேட்டை தண்ணீரில் கலந்து தடவலாம்.

இந்த செர்கேரியா தோல் வராமல் தடுக்க நீர்நிலைகளில் குளிக்கக்கூடாது. வயலில் வேலை செய்யும் போது காலுக்கு உறை மாதிரி போட்டுக் கொள்ளலாம்.

### மனிதர்களில் நாய் நாடாப்புழுவின் நீர்கட்டி தாக்கம்

நாய் மற்றும் வனவிலங்குகளில் காணப்படும் எக்கினோ காக்கஸ் கிரானுலோசஸ் என்ற நாடாப்புழுவின் இளம்நிலை நீர்கட்டி தாக்கம் தாவரங்களை உண்ணும் கால்நடைகள் மற்றும் மனிதர்களில் காணப்படும்.

எக்கினோகாக்கஸ் நாடாப்புழுவினால் பாதிக்கப்பட்ட நாய் நரிகளின் மலத்தில் நாடாப்புழுவின் சின்ன துண்டுகள் வெளியேறி முடடைகள், விவசாய நிலம், காய்கறி தோட்டம் மற்றும் நாய்கள் நடமாடும் இடங்களில் பரவிவிடும். குழந்தைகள் நாய்கள் நடமாடும் இடங்களில் விளையாடும் போது, காய்கறிகளை கழுவாமல் சாப்பிடும் போது, நாயுடன் விளையாடும் போது எக்கைஷ்னாகாக்கஸன் முட்டைகளை தின்று விடுவதால் முட்டைகள் குடலில் பொரிக்கப்பட்டு வெளி வரும் கருக்கள் இரத்தத்தின் வழியாக கல்லீரல், நுரையீரல், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகம் போன்ற உறுப்புகளுக்கு போய் இளநிலை (நீர்கட்டியாக) ஹைடாடிட்சிஸ்ட் 6 – 12 மாதங்களில் பந்து போல் வளர்ந்துவிடும்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் ஹைடாடிட் நீர்கட்டி நுரையீரலில் இருந்தால் சுவாசம் சம்பந்தமான அறிகுறிகளும், நுரையீரலில் இருந்தால் வயிறு வீக்கமும் காணப்படும். மேலும் கட்டி உடைந்துவிட்டால் காப்புபிறந்த அதிர்ச்சி ஏற்பட்டு சாக்கினால் இறப்பு ஏற்படும்.

ஹைடாடிட் நீர்கட்டி இருக்கும் இடத்தை எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் மூலம் கண்டறியலாம். அறுவை சிகிச்சை மூலம் ஹைடாடிட் நீர்கட்டியை எடக்கலாம். மேலும் மெபன்டசால், ஆல்பென்டசால் மற்றும் பிராசிக்குவின்டல் போன்ற குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்கலாம்.

**மனிதர்களில் ஹைடாடிட் நீர்கட்டி வராமல் தடுக்க**

வீடுகளில் நாய் வளர்ப்பவர்கள், சுத்தமாக இருக்கவேண்டும். நகத்தை கடிக்கக்கூடாது. குழந்தைகளுக்கு நாய்களை விளை யாட கொடுக்கக்கூடாது. குழந்தைகள் வெளியில் விளையாடி விட்டு வந்தால் கை கால்களை கழுவிய பின்பு உணவு உண்ண வேண்டும்.

காய்கறிகளை நன்கு கழுவியபின் சாப்பிடவேண்டும்

நாய்களுக்கு இறைச்சியை வேகவைத்து கொடுக்கவேண்டும்.

நாய்களுக்கு பிராசிக்குவின்டல என்ற குடறபுழு நீக்க மருந்தைக் கொண்டு குடற்புழு நீக்கம் செய்துவிட்டு 48 மணி நேரம் கட்டி போட்டு மலத்தை முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.

## ஹைடாடிடோசிஸ்

இந்த நோய் ஆடு, மாடு, பன்றி, குதிரை மற்றும் மனிதர்களிலும் காணப்படக்கூடியதாகும். ஆடுகள் மேயும் போது எக்கீனோகாக்கஸ் கிரானுலோசஸ் என்ற நாய் நாடாப்புழுவின் முட்டைகளைத் தின்றுவிடுவதால் இந்நோய் ஏற்படுகிறது. நாடாப்புழுவின் முட்டைகள் குடலை சென்றடைந்தவுடன் பொரிக்கப்படுகிறது. முட்டையிலிருந்து வெளிவந்த கரு ரத்தத்தின் மூலம் நுரையீரல் மற்றும் பிற உறுப்புகளுக்கு சென்றடைந்து இங்கு நீர் கட்டிகளாக வளரும். இந்த கட்டி மெதுவாக வளர்ச்சியடையக்கூடியதால் 6-7 மாதத்தில் சிறிய பந்து வடிவத்தில் காணப்படும். சில கட்டிகள் மிகவும் பெரியதாக வளர்ந்த உறுப்புகளை அழுத்துவதால் அவைகளின் வேலைத் திறனை இழந்துவிடும். விலங்குகளில் இந்நோயின் பாதிப்பு தென் படாமல் போய்விடும். ஆனால் மனிதர்களில் கவனிக் காமல் விட்டுவிட்டால் சில நேரத்தில் இறப்பை ஏற்படுத்திவிடும்.

எக்கினோகாக்கோசிஸ் (எக்கினோகாக்கஸ் கிரானுலோசஸ்) என்பது உலகளவில் மனிதர்களைப் பாதிக்கும் ஒரு ஜூனோடிக் லார்வா தொற்று ஆகும். இந்த நிலையில் உள்ள நோயாளிகள் பல ஆண்டுகளாக அறிகுறியற்றவர்களாக இருக்கலாம் மற்றும் கல்லீரல் நீர்க்கட்டிகள் (ஹைடடிட் நீர்க்கட்டிகள்) உடைந்தால் மட்டுமே அறிகுறிகள் தோன்றும். இந்த செயல்பாடு எக்கினோகாக்கோசிஸின் மதிப்பீடு மற்றும் மேலாண்மையை விளக்குகிறது மற்றும் இந்த நிலையில் உள்ள நோயாளிகளுக்கு பராமரிப்பை மேம்படுத்துவதில் தொழில்முறை குழுவின் பங்கை மதிப்பாய்வு செய்கிறது.

தகவல் : ***முனைவர்.ந.ராணி முனைவர்.கு.பொன்னுதுரை மற்றும் முனைவர்.மா.சிலமபரசன், பேராசிரியர், கால்நடை ஒட்டுண்ணியல் துறை, கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை.***



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்** நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சிறுதானியங்களின் மறுமலர்ச்சி

## பாரம்பரிய உணவிலிருந்து உலகளாவிய ஆரோக்கிய இயக்கம் வரை

‘வரகு, சாமை, தினை, கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்கள் ஒரு காலத்தில் தமிழர்களின் அன்றாட உணவின் அடையாளமாக இருந்தன; இன்று அவை மீண்டும் ஆரோக்கியமான எதிர்கால உணவாக உலக அரங்கில் கவனம் பெற்று வருகின்றன.‘

பசுமைப் புரட்சிக்குப் பிறகு நெல் மற்றும் கோதுமை சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால், சிறுதானியங்களின் சாகுபடி மற்றும் பயன்பாடு படிப்படியாகக் குறைந்தது. ஆனால் வாழ்க்கை முறை நோய்கள் அதிகரித்தல், காலநிலை மாற்றம், நீர்ப்பற்றாக்குறை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நிலையான வேளாண்மையின் அவசியம் போன்ற காரணங்களால், சிறுதானியங்கள் மீண்டும் மக்களின் உணவுத் தட்டிலும் விவசாயிகளின் வயல்களிலும் இடம்பிடித்து வருகின்றன.

2023-ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை ‘சர்வதேச சிறுதானிய ஆண்டு‘ (International Year of Millets) என அறிவித்தது. அதனைத் தொடர்ந்து உலகம் முழுவதும் சிறுதானியங்களின் சாகுபடி, பயன்பாடு மற்றும் ஆராய்ச்சி வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியா, குறிப்பாக தமிழ்நாடு, இந்த மறுமலர்ச்சியின் முன்னோடிகளில் ஒன்றாக விளங்குகிறது.

### சிறுதானியங்கள் என்றால் என்ன?

சிறுதானியங்கள் (Millets) என்பது குறைந்த நீர், குறைந்த உரம் மற்றும் குறைந்த பராமரிப்பில் வளரக்கூடிய சிறிய தானியப் பயிர்கள் ஆகும். இவை வறட்சி மற்றும் வெப்பத்தைத் தாங்கும் திறன் கொண்டவை.

### தமிழகத்தில் முக்கியமாகப் பயிரிடப்படும் சிறுதானியங்கள்

- கம்பு (Pearl Millet)
- கேழ்வரகு (Finger Millet)
- தினை (Foxtail Millet)
- சாமை (Little Millet)
- வரகு (Kodo Millet)
- குதிரைவாலி (Barnyard Millet)
- பனிவரகு (Proso Millet)

இவை அனைத்தும் ஊட்டச்சத்து நிறைந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் விவசாயிகளுக்கு இலாபகரமான பயிர்களாகும்.

**ஏன் சிறுதானியங்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறுகின்றன?**

**1. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற பயிர்கள்**

இன்று உலகம் முழுவதும் வேளாண்மை காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்கொள்கிறது.

மழை குறைவு, அதிக வெப்பநிலை, வறட்சி, நீர்ப்பற்றாக்குறை போன்ற சூழ்நிலைகளிலும் சிறுதானியங்கள் நல்ல மகசூல் தருகின்றன. அதனால் இவை 'Climate-Smart Crops' என்று அழைக்கப்படுகின்றன.

**2. குறைந்த நீர் – அதிக பயன்**

நெல் மற்றும் கரும்பு போன்ற பயிர்களுடன் ஒப்பிடும் போது சிறுதானியங்களுக்கு மிகவும் குறைந்த நீர் போதுமானது.

இதனால், நீர் சேமிக்கப்படுகிறது. வறண்ட பகுதிகளிலும் சாகுபடி செய்ய முடிகிறது. மழையை மட்டுமே நம்பிய விவசாயிகளுக்கு ஏற்ற பயிராக விளங்குகிறது.

**3. அதிக ஊட்டச்சத்து**

சிறுதானியங்கள் வெறும் உணவு அல்ல; அவை 'ஊட்டச்சத்து பொக்கிசங்கள்' ஆகும்.

இவற்றில், அதிக நார்ச்சத்து, புரதம், கால்சியம், இரும்புச்சத்து, துத்தநாகம், பி–வைட்டமின்கள், ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்து உள்ளன.

கேழ்வரகில் கால்சியம் அதிகமாகவும், கம்பில் இரும்புச் சத்து மற்றும் நார்ச்சத்து அதிகமாகவும் காணப்படுகிறது.

**4. வாழ்க்கை முறை நோய்களைத் தடுக்க உதவுகின்றன**

**இன்றைய உணவுப் பழக்க வழக்கங்களால் :** நீரிழிவு, உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள், அதிகரித்து வருகின்றன.

**சிறுதானியங்கள் :** குறைந்த Glycemic Index (GI), அதிக நார்ச் சத்து, மெதுவான சர்க்கரை வெளியீடு கொண்டதால் ஆரோக்கிய மான உணவாக பரிந்துரைக்கப்படுகின்றன.

**விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் :** குறைந்த முதலீடு

**சிறுதானியங்களுக்கு :** குறைந்த உரம், குறைந்த பூச்சிக்கொல்லி, குறைந்த நீர், தேவைப்படுவதால் உற்பத்திச் செலவு குறைகிறது.

**வறட்சியைத் தாங்கும் திறன் :** வறண்ட மற்றும் மானாவாரி பகுதிகளில் கூட நல்ல மகசூல் தருகின்றன.

**குறுகிய காலப் பயிர்கள் :** பல சிறுதானியங்கள் 70-100 நாட்களுக்குள் அறுவடைக்கு வருகின்றன. இதனால், விரைவான வருமானம், இரண்டாம் பயிர் சாகுபடிக்கு வாய்ப்பு, கிடைக்கிறது.

**குறைந்த பூச்சி மற்றும் நோய் தாக்குதல் :** பல சிறுதானியங்களில் நோய் மற்றும் பூச்சி தாக்குதல் குறைவாக இருப்பதால் இரசாயன மருந்துகளின் பயன்பாடும் குறைகிறது.

**சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பயிர்கள்**

**சிறுதானியங்கள் :** மண்ணின் வளத்தைப் பாதுகாக்கின்றன. குறைந்த கார்பன் தடயத்தை (Carbon Footprint) உருவாக்குகின்றன. குறைந்த நீர் பயன்படுத்துகின்றன. பல்லுயிர் பெருக்கத்தை ஊக்குவிக்கின்றன. இதனால் நிலையான வேளாண்மைக்கு சிறந்த தேர்வாக விளங்குகின்றன.

**உணவுப் பாதுகாப்பில் சிறுதானியங்களின் பங்கு**

எதிர்காலத்தில் உலக மக்கள் தொகை அதிகரிக்கும் நிலையில், குறைந்த வளங்களில் அதிக ஊட்டச்சத்துடன் நிலையான உணவு உற்பத்தி தேவைப்படுகிறது. இந்த தேவையை நிறைவேற்றுவதில் சிறுதானியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**இவை :** வறட்சி காலங்களிலும் விளையும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏற்றவை. கிராமப்புற ஊட்டச்சத்தை மேம்படுத்து கின்றன. உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துகின்றன.

**தாவர இனப்பெருக்கத்தின் பங்கு :** சிறுதானியங்களின் உற்பத்தியை மேலும் உயர்த்த, தாவர இனப்பெருக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

**ஆராய்ச்சியின் முக்கிய நோக்கங்கள்**

அதிக மகசூல் தரும் ரகங்கள், குறுகிய கால ரகங்கள், நோய் எதிர்ப்பு, அதிக இரும்பு மற்றும் கால்சியம் கொண்ட ரகங்கள், இயந்திர அறுவடைக்கு ஏற்ற ரகங்கள், வெப்பம் மற்றும் வறட்சியைத் தாங்கும் ரகங்கள், இவை எதிர்கால சிறுதானிய வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமாக அமையும்.

**மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் - புதிய சந்தை வாய்ப்புகள்**

இன்று சிறுதானியங்கள் பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட் களாக மாற்றப்படுகின்றன.

சிறுதானிய மாவு, நூடுல்ஸ், பாஸ்தா, பிஸ்கட், குக்கீஸ், உடனடி உணவுகள், காலை உணவு தானியங்கள், பானங்கள், இவை நகர்ப்புற இளைஞர்கள் மற்றும் ஆரோக்கிய உணவு விரும்பிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

**தமிழ்நாட்டில் சிறுதானிய வளர்ச்சிக்கான வாய்ப்புகள்**

தமிழ்நாட்டின் வறண்ட மாவட்டங்களான : சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் போன்ற பகுதிகளில் சிறுதானிய சாகுபடியை விரிவுபடுத்த நல்ல வாய்ப்புகள் உள்ளன.

மேலும், விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (ய்ணேநு), பதப்படுத்தும் மையங்கள், ஏற்றுமதி வாய்ப்புகள், இயற்கை வேளாண்மை ஆகியவை இந்தத் துறையை மேலும் வளர்க்கும்.

**சவால்கள்**

சிறுதானிய வளர்ச்சிக்கு இன்னும் சில சவால்கள் உள்ளன.

பதப்படுத்தும் வசதிகள் குறைவு, சந்தை விழிப்புணர்வு குறைவு, நுகர்வோர் பழக்க மாற்றம், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் விலை, இயந்திரமயமாக்கல் தேவைகள்.

இந்த சவால்களை அரசு, ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில் முனைவோர் மற்றும் விவசாயிகள் இணைந்து சமாளிக்க வேண்டும்.

**எதிர்காலப் பாதை**

**சிறுதானியங்களின் மறுமலர்ச்சியை நிலைநிறுத்த** : பள்ளி மற்றும் கல்லூரி உணவுத் திட்டங்களில் சேர்த்தல், பொது விநியோக அமைப்பில் (PDS) அதிகப்படுத்துதல், மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவித்தல், புதிய ரகங்களை உருவாக்குதல், விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்குதல், ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் அவசியம்.

**முடிவுரை**

சிறுதானியங்கள் என்பது கடந்த காலத்தின் பாரம்பரிய உணவு மட்டுமல்ல; எதிர்காலத்தின் அறிவார்ந்த உணவும், நிலையான வேளாண்மையின் அடையாளமும் ஆகும். காலநிலை மாற்றம், நீர்ப்பற்றாக்குறை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற உலகளாவிய சவால்களுக்கு இயற்கை வழங்கிய சிறந்த தீர்வுகளில் ஒன்றாக சிறுதானியங்கள் விளங்குகின்றன.

அறிவியல் ஆராய்ச்சி, தாவர இனப்பெருக்கம், மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகள், நவீன சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு ஆகியவை ஒருங்கிணைந்தால், சிறுதானியங்களின் மறுமலர்ச்சி ஒரு தற்காலிக இயக்கமாக இல்லாமல், இந்திய வேளாண்மையின் புதிய வளர்ச்சிப் பாதையாக மாறும்.

‘சிறுதானியங்களை விதைப்பது ஒரு பயிரை மட்டும் வளர்ப்ப தல்ல; ஆரோக்கியமான மக்களையும், வளமான விவசாயத்தையும், நீடித்த சுற்றுச்சூழலையும் உருவாக்கும் முதலீடாகும்.‘

தகவல் : ***வெங்கடேஷ் ம, முதுநிலை உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா ரா, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி –621 104.***

